உ
கடவுள் துணை

# செந்தமிழ்

| தொகுதி ௬௧<br>Vol. 61 | திருவள்ளுவர் ஆண்டு 1996<br>குரோதி—சித்திரை, வைகாசி<br>1965 April, May | பகுதி ௧, ௨<br>No. 1, 2 |
|---|---|---|

# உரிச் சொல் நிகண்டு

—✻—

மு. அருணாசலம்.

## 1. காலம்

தமிழில் தோன்றிய ஆதி நிகண்டுகள் திவாகரமும் பிங்கலந்தையும். சோழநாட்டில் உள்ள அம்பரில் வாழ்ந்த அருவந்தை என்பவர் புதல்வரான சேந்தன் என்ற வள்ளலால் ஆதரிக்கப் பெற்ற திவாகர முனிவர் திவாகரம் பாடினார். இதை அக்காலத்து உபசார வழக்குப்படி "சேந்தன் செய்த திவாகரம்" என்றே அவர் குறிப்பிட்டார். திவாகரருடைய புதல்வர் பிங்கல முனிவர் என்றும் இவர் செய்த நூல் பிங்கலந்தை என்றும் பிங்கலத்தின் சிறப்புப் பாயிரத்தில் அறிகிறோம். இவ்விரு ஆசிரியர்களின் காலமும் இன்று திட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஆயினும் இருவரும் 10 ஆம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்தவர்கள் என்று மட்டும் சொல்ல முடியும்.

பின்னால் வந்த நிகண்டு நூல்கள் மிகப்பல. இவற்றுள் காங்கேயர் செய்த உரிச் சொல் நிகண்டு, கயாதரர் செய்த கயாதரம், மண்டல புருடர் செய்த நிகண்டு சூடாமணி என்பவை காலத்தால் பழமையானவை, சிறப்பானவை.

இவற்றுள், உரிச்சொல் நிகண்டின் காலம் இது வரை இன்ன தென்று திட்டமாகச் சொல்ல முடிய வில்லை. அதை வரையறை செய்வதற்கு இப்போது பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

கி.பி. 1488 இல் மதுரைச் சிவப்பிரகாசர் என்ற சிறந்த சித்தாந்த சாத்திர உரையாசிரியர், உமாபதி சிவாசாரியார் பாடிய சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய சிவப் பிரகாசத்துக்குப் பேருரை எழுதினார்:

ஓதுபுகழ் சகாத்தம் ஆயிரத்து நானூற்
 றொரு பதின் மேற் செல்கின்ற காலம் தன்னின்
மாது பயில் மதுரையில் வாழ் சிவப் பிரகாசன்
 வண்மையருள் நிகழ்ச்சியினால் உண்மை யாக
ஈது மலம் ஈது வினை ஈது மாயை
 ஈதுயிர்பின் ஈதுசிவம் என்றே காட்டித்
தீதில்சிவப் பிரகாசச் செய்யுள் நூறுந்
 தேர்ந்துரையிட்டே உலகிற் சிறப்பித்தனனே.

என்ற உரைச் சிறப்புப் பாயிரத்தால், உரையின் காலம் சுகம், (1410 கி.பி.1438) என்று ஏற்படுகிறது. சிவப்பிரகாசர் சிவப் பிரகாசம் 38 ஆம் பாடலில், "உயிர் வாயு என்றும் சொல்லப்படும் என்பதற்குப் பிரமாணம்

'உயிர் ஒலி வங்கூழ் சலனம் வாதம் வளி மாருதம்' என்றும் இலக்கணங்களிலும் கண்டு கொள்க'' என்று எழுதுகிறார். இலக்கணம் என்று இவர் கூறுவது நிகண்டு; நிகண்டு களுள்ளும் உரிச் சொல் நிகண்டு; இவர் கூறிய மேற்கோள் இதன் முதல் தொகுதி 35 ஆம் பாடலில் காணப்படுகிறது.

கனல்அழல் தீத்தழல் பாவகன் வன்னி
அனல்சிகி அங்கி எரியாம்—அநிலங்கால்
ஊதை பவனன் உயிர்ப் பொலிவங் கூழ் சலனன்
வாதம் வளிமா ருதம்.

(உயிர்—உயிர்ப்பு, பாட பேதம்) இதனால் உரிச் சொல் நிகண்டானது சிவப்பிரகாசர் காலமாகிய 1488 க்கு முந்தியது என்று அறிகிறோம். மேற்கோளாக இந்நிகண் டைக் காட்டத் தகுந்த விளக்கம் இந் நாலுக்கு ஏற்பட ஏறக்குறைய ஒரு நூறாண்டாவது சென்றிருக்கும் என்று நாம் கருதலாம். எனவே இந் நிகண்டின் காலம் ஏறக் குறைய கி.பி. 1400 க்குச் சற்று முன்னாக இருக்கும் என்று நாம் முடிவு செய்வது பொருந்தும்.

இம் முடிவுக்கு வேறு சில செய்திகளும் துணை செய் கின்றன. முதலாவது உரிச்சொல் நிகண்டு நூலின் பெயர்; நூலைச் செய்தார் காங்கேயர். இவர் நூல் செய்த காலத்தில் நிகண்டு என்ற சொல், இன்று நாம் அறிகிற பொருளில் தமிழ் மொழியில் ஆட்சிக்கு வரவில்லை; "இடு குறியாற் பெயர் பெற்றன, நிகண்டு, கலைக் கோட்டுத் தண்டு முத லாயின'' என்று இறையனார் களவியல் உரை போன்ற உரைகள் சில குறிப்பிடுகின்றன.

ஆனால் முன் தோன்றிய நிகண்டு நூல்களாகிய திவா

கம், பிங்கந்தை, உரிச்சொல், கயாதரம் என்ற நான்கும் தம்மை நிகண்டு என்று சொல்லிக் கொள்ளவில்லை. திவாகரர் தம் நூலைத் திவாகரம், சேந்தன் திவாகரம் என்று மட்டுமே கூறினர். இது என்ன பொருள் பற்றியது என்பதைப் புலப்படுத்துவதற்கு இதன் பெயரில் எந்தக் குறிப்பும் இல்லை.

அடுத்துத் தோன்றியது பிங்கலந்தை. இதைச் செய்த பிங்கல முனிவர் திவாகரருடைய புதல்வர் என்பது வரலாறு.

செங்கதிர் வரத்தால் திவாகரன் பயந்த
பிங்கல முனிவன் எனத் தன் பெயர் நிறீஇ
உரிச் சொற் கிளவி விரிக்குங்காலை—

என்பது பிங்கலத்தின் சிறப்புப் பாயிரம். தம் நூலை இவர் "உரிச் சொற்கிளவி" என்று கூறுகிறார். (கிளவி— இங்கு நூல்) பின்னர் வந்த பவணந்தி முனிவர் நன்னூல் 462 ஆம் சூத்திரத்தில் பிங்கலந்தையை உரிச்சொல் என்றே குறிப்பிடுகின்றார்.

பிங்கலம் முதலா
நல்லோர் உரிச்சொலுள் நயந்தனர் கொளலே

என்பது சூத்திரம், இதற்கு மயிலைநாதர் "பிங்கல முனிவர் முதலான புலவர்களால் சொல்லப்பட்ட உரிச்சொற் பனுவல் ஒன்றே (17 ஆம் நூற்றாண்டில் நன்னூல் உரை செய்த சங்கர நமச்சிவாயப் புலவர், "ஏனைப் புலவரால் கூறப்பட்ட பிங்கலம், திவாகரம், சூடாமணி முதலி

ய நூல்களுள் வகுக்கும் உரிச் சொற்றெகுதிகளுள் விரும் பிக் காண்க.'' என்று பின்வந்த சூடாமணி நிகண்டையும் சேர்த்து உரை யெழுதி விட்டார்.)

மிகவும் பிற்காலத்தில் ஆசிரியநிகண்டு பாடிய ஆண் டியப்பப் புலவர், தமக்கு முன் உள்ள பல நிகண்டுகளை வரிசை படுத்திச் சொல்லும் போது, ''முன்னுள்ள திவா கரம், பிங்கல நிகண்டு, சீர் முந்து காங்கேயன் உரிச்சொல்'' என்ற தொடரால் காங்கேயர் நூலைக் குறிப்பிடுகிறார்.

இங்கு நாம் கவனிக்க வேண்டுவது, திவாகரம், பிங் கலம், காங்கேயர் என்ற வரிசை முறையும் காங்கேயன் உரிச் சொல்; என்ற நூற் பெயரும் ஆகும். இவர் கருத்தின் படி காங்கேயர் நிகண்டினுடைய பெயர், காங்கேயன் உரிச் சொல்; இது வரிசை முறையில் பிங்கலத்துக்கு அடுத் ததாகும்.

இனி, நிகண்டு என்ற வடசொல், முதன் முதலில் வடமொழி வேதத்திற்கு அங்கமாய், அதில் பயின்ற சொற் பொருள் கூறும் கருவி நூலுக்கு உரிய சிறப்புப் பெயராய் இருந்தது. பின்னர் சொற் பொருள் உரைக்கும் தமிழ் நூல் கள் அனைத்துக்குமே பொருந்துகிற பொதுப்பெயராக இது தமிழில் கொள்ளப்பட்டது. இவ்வாறு கொண்ட முதல் நூல், மண்டல புருடர் செய்த சூடாமணி நிகண்டு இவர் தம் நிகண்டின் பாயிரம் முதற் செய்யுளிலேயே நூற் பெயர் நிகண்டு சூடாமணி என்று கூறுகிறார்.

மன்னிய நிகண்டு சூடா. மணியென ஒன்று சொல்வேன்
இங்நிலந்தன்னின் மிக்கோர் யாவரும் இனிது கேண்மின்

என்றுரைக்கிறார். மண்டல புருடர் விஜயநகரத்தரசராகிய கிருஷ்ணதேவராயர் காலத்தில் வாழ்ந்தவர். ராயர் காலம் கி.பி. 1509—1531. எனவே இவர் நூல் செய்த காலம் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கம்.

சூடாமணிக்கு முந்தியநிகண்டுகள் எதையும் நிகண்டு என்று பெயர் சொல்லவில்லை; உரிச்சொல் என்றே சொல்லுகின்றன. காங்கேயர் நூலின் பெயர் சொல்லவில்லை. ஆயினும்,

பலகலை தேவர் காங்கேயன் பட்ட முடையான்
உலகறியச் சொன்ன உரிச்சொல்—

என்ற பாடலால் அவர் நூல் உரிச்சொல் என்றே நாம் அறிகிறோம். இந் நூலானது, இவ்வகை நூலுக்கு நிகண்டு என்ற பெயர் அமைவதற்கு முந்திய காலத்தில் எழுதப்பட்டது என்பது இதனால் புலனாகும்.

இவ்வாறு எழுதப் பெற்ற மற்றொரு நூல் கயாதரம் ஆகும். இந் நூல் செய்த கயாதரர், "தேவைக் கயாதரன் தொல்வேதியன் சொற்ற உரிச்சொற் பனுவல்" என்று கூறுவதும் இங்கு அறியத்தக்கது.

இது காறும் நாம் கூறியது, 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகண்டு என்ற பெயர் புதிதாகத் தமிழில் கொள்ளப்பட்டது, அந்தப் பெயரால் இப்பொழுது வழங்கும் நூல்கள் அனைத்தையும் அக்காலத்துக்கு முன் உரிச்சொல் என்றே வழங்கி வந்தார்கள், அவ்வாறு வழங்கப் பெற்ற நூல்களில் காங்கேயன் உரிச்சொல்லும் ஒன்று என்பதாகும்.

இனி, நிகண்டு நூல்களை நாம் ஆராயும்போது, பண்டை நல்லாசிரியர் கொண்ட ஒரு நூல் மரபு புலனுகின்றது. நிகண்டுசெய்தோர், பாட்டியல் செய்தோர் முதலிய பண்டைத் தமிழ்ப்புலவர்கள், முதல்வழி, சார்பு எனத் தங்களுக்குள் ஒரு யாப்பு நியதியை வகுத்துக்கொண்டு அதன்படி நூல்செய்து வந்திருக்கிறுர்கள். ஆதி நூல்செய்தோர் அனைவரும் நூற்பாவினுல் செய்தனர். அடுத்துத்தோன்றின வெண்பா நூல்கள். மூன்ருவதாக வந்தவை கலித்துறையில் செய்யப்பெற்றிருந்தன, கடைசியாக வந்தவை விருத்தப்பாவினுல் செய்யப்பெற்றன. பாட்டியல்பற்றி இந்த முறையை நாம் பொருத்திப் பார்த்தால் முதலாவதாக பன்னிருபடலம்–நூற்பா; அடுத்து வச்சணந்தி மாலை–வெண்பா; பின்னர் நவநீதப்பாட்டியல், வரையறுத்த பாட்டியல்-கலித்துறை; நான்காவதாக சிதம்பரப்பாட்டியல்-விருத்தம் என்ற முறையில் அமைந்திருப்பது தெளிவாகும்.

நிகண்டு நூல்களிலும் இப்படியே, காலமுறைப்படி முதலில் திவாகரம், பிங்கலந்தை–நூற்பா; பின்னர் காங்கேயன் உரிச்சொல்-வெண்பா; அடுத்துக் கயாதரம்கட்டளைக் கலித்துறை; இறுதியில் நிகண்டுசூடாமணி–விருத்தம் இந்த முறையினுல் உரிச்சொல்லுக்குரிய காலமும் வரையறுக்கப்படுகிறது. அதாவது கி. பி. 1400–1450 ஆகிய கால எல்லைக்குள் தோன்றிய கயாதரத்துக்குக் காலத்தால் முந்தியதாகக் காங்கேயன் நூலை நாம் கருதவேண்டும்.

இக்கருத்துக்களுக்கு அரண்செய்யும் வகையில் மற்ருெரு சான்றும் கிடைக்கிறது. செயல் பற்றிய பெயர்த் தொகுதி இரண்டாம் வெண்பாவில், வணங்கல் என்ற பொருளில் காங்கேயர் சலாம் செய்தலைக் கூறுகிருர்:

வந்தனை காணல் வணங்கல் பணிதலே
தந்தலை தாழ்தல் சலாம் செய்தல்-முந்தித்
தொழுதலே தண்டன் தொடர்ந்து முயங்கல்
தழுவலே விள்ள லெனச் சாற்று-

என்பது காண்க. சலாம் என்ற சொல் தமிழ்நாடானது முகம்மதியப்படையெடுப்பாளர் வசமாகியகாலத்தில் தமிழ் மொழியில் முதல்முதலாக வழங்கத்தொடங்கி அருணகிரி நாதரால் பிரசித்தியடைந்தது; "சலாமிடற்கு ஏக்கறு பெரு மாளே" என்று அவர் பாடுகிறார்.

சுராதி பதி மாலயனும்மாலொடு சலாமிடு சுவாமிமலை
வாழும் பெருமாளே

என்பது திருப்புகழ் 89. (17-ஆம் நூற்றாண்டில் வடநாடு சென்ற அருட்புலவராகிய குமரகுருபர சுவாமிகளே பிற் காலத்தில் அதிகமாகச் சலாம் என்ற சொல்லை எடுத்தாளு கிறார். வேறு இலக்கிய ஆட்சி இச்சொல்லுக்கு ஏற்பட வில்லை.)

அருணகிரிநாதர் காலம் 14-ஆம் நூற்றாண்டின் இறு தியும் 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும். உரிச் சொல்காரர் இந்நூலைப் பிரயோகிக்கிறார்; ஆதலால் இவர் காலமும் அதே காலம் என்பது பொருந்துவதாகும். அதா வது சுமார் கி. பி. 1400.

எனவே, மதுரைச் சிவப்பிரகாசர் குறிப்பினல் கி.பி. 1400 என்று முடிவுசெய்கின்ற உரிச்சொற் பனுவலின் கால மானது, வேறுவகையாக, நிகண்டு என்ற நூற்பெயர் வர லாற்றாலும், சலாம் என்ற சொல் வரலாற்றின் துணையா

லும், வெண்பா நூல் என்ற யாப்புநியதியாலும், வலியுறுத்தப்பெறுகின்றது.

## 2. ஆசிரியர்.

இவ்வுரிச்சொல் நிகண்டு செய்தார் காங்கேயர் என்பவர், இவரைக் குறித்த வரலாறுகள் திட்டமாகத் தெரியவில்லை. **கொங்கு மண்டல சதகம்:** இவர் மோரூரினர் என்று கூறுகின்றது.

அலைகடல் சூழும் அவனியிற் செந்தமிழ் ஆய்பவர்கள்
நலனுறத் தக்க வகையாக உள்ளம் நனிமகிழ்ந்தே
இலகும் உரிச்சொல் நிகண்டு வெண்பாவின்
இசைத்தகலை
வலஎழில் காங்கேயன் வாழுமோ ரூர்கொங்கு
மண்டலமே

என்பது 91-ஆம் பாடல். "பெருத்த நூல்பலவும் சுருக்கித் தமிழில் உரிச்சொல் நிகண்டென உரைத்த காங்கேயன்" என்று பாம்பண்ண கவுண்டன் குறவஞ்சி கூறுகின்றது. இக்கூற்றுக்களால் இவ்வாசிரியர் கொங்குநாட்டினர் என்பது அந்நாட்டார் கருத்து எனத் தெரிகிறது.

காங்கேயர் செங்கற்பட்டு ஜில்லாவில் வாழ்ந்த ஒரு முனிவர், மரபினல் வேளாளர் என்பது சிலர் கருத்து. கொங்குநாட்டு மோரூரில் இம்முடிக்காங்கேயர் என்றபட்டமுடையவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். இவர்கள் மூன்றாம் குலோத்துங்க சோழன்காலந் தொடங்கிச்செல்வாக்கு

மிகுந்த நாட்டுத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். மும்முடிச் சோழன் என்ற பட்டத்தையே தாங்களும் தரித்துக் கொண்டார்கள். இந்நூலாசிரியர் இக்காங்கேயருள் ஒருவரோ என்பது தெளியமுடியாமலிருக்கிறது. **காங்கேயன் நாலாயிரக் கோவை** என்ற ஒரு நூல் ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்றது என்பது ஒரு வரலாறு. பொப்பண்ண காங்கேயன் என்பவன் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாருக்கு ஆதரவளித்து உரைசெய்வித்தான் என்பது மற்றொரு வரலாறு. இவர்கள்; வேறு உரிச்சொல்நிகண்டு நூலாசிரியர் வேறு, காலமும் வேறு.

இந்நிகண்டாசிரியர் சிறந்த சைவர், தில்லை நடராசப் பெருமானிடத்து ஈடுபட்டுச் சிவ வணக்கம் பாடியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

திருமாலும் செங்கலை மேயானும் காணாப்
பெருமான் பிறைசூடும் பெம்மான்-அருள்மூர்த்தி
நன்னெஞ்சின் நான்மறையோன் தில்லைநடம் புரிவோன்
என்னெஞ்சின மேய இறை.

இந்நூலின் முகப்பில் விநாயக வணக்கமாக "மதிபாய் சடை முடித்து" என்ற பிரசித்தமான விநாயக வணக்கப்பாடல் காணப்படுகிறது:

மதிபாய் சடைமுடித்து மாசுணப்பைம் பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான-நதிபாய்.
இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்து என்னுள்ளம்

உருகக விட்டு நின்ற ஒளி. *

இப்பாடல் இந்நூல் முகப்பில் மட்டுமின்றி, தமிழ் நாவலர் சரிதை என்ற பழைய தொகுப்பு நூலின் தொடக்கத்திலும், தொல்காப்பிய ஏடுகள் பலவற்றிலும் பெய்யப் பெற்றுள்ளது. இது காங்கேயர் பாடலா என்பது நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.

உரிச்சொல் நிகண்டு இன்று பன்னிரண்டு தொகுதிகளாய் அச்சிடப்பட்டுள்ளது. முதலில் வெளிவந்த பதிப்புக்களாகிய 1340-புதுச்சேரி பதிப்பு, 1858 யாழ்ப்பானம் சதாசிவபிள்ளை பதிப்பு ஆகிய இரண்டிலும் 10, 12 ஆகிய இரண்டு தொகுதிகள் இல்லை. 1890இல் பிங்கலந்தை அச்சிட்ட சிவன் பிள்ளை அதே ஆண்டில் உரிச்சொல்நிகண்டை அச்சிட்டு இதில், "10, 12 ஆகிய இரு தொகுதிகளும் வழங்காதொழிந்தன" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஏனையதொகுதிகளில் 214 வெண்பாக்களும், 3,200 சொற்களும்உள்ளன. பின்னல் 1905இல் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் பன்னிரு தொகுதிகளையும் சேர்த்து அச்சிட்டார்.

ஏட்டுப் பிரதி ஒன்றில் நூல் இறுதியில் காணப்படும்

---

* நால் வாய்த்து என்பது, இருகவுட்டு, முக்கட்டு என்ற தொடர்கள்போல், எண்ணுல் பொருள்படவேண்டுமேயன்றி, வேறுபொருள் பயந்து தொனியால் மட்டும் எண்ணுப் பெயர்பட இருப்பது இலக்கியச் சுவைக்கு இழுக்கு; நால்வாய்த்து என்பது "நாற்றோட்டு" என்றிருப்பதே சிறப்பு என்றகருத்துடையவர் டி. கே. சி. யவர்கள்.

ஒரு கலித்துறைப் பாடலாலானது, "திருக்கானை வாழும் வணிகன் பராக்கிரம பாண்டியதேவன் என்ற பெயரினன், காங்கேயன் சொன்ன உரிச்சொல்லைப் பத்துத்தொகுதியில் சேர்த்தான்" என்று குறிப்பிடுகிறது.

உத்தம சீலத்துக் காங்கேயன் சொன்ன உரிச்சொல் தன்னை
வைத்து மணத்துத் திருக்கானைவாழும் வணிகன் கற்றோர்
சித்தமகிழப் பராக்கிரம பாண்டியதேவன் கண்டோர்
பத்துத் தொகுதியிற் சேர்த்தான் எவரும்படித்திடவே.

---

### அச்சம்

எதைச் செய்ய அச்சப்படுகிறோமோ அதையே யாண்டும் செய்யவேண்டும். இதுவே அச்சத்தை வெல்வதற்குத் தகுந்த வழி.

—காந்தியடிகள்.

அச்சமே சாவு; அச்சமின்மையே வாழ்வு.

—சுவாமி விவேகானந்தர்.

அச்சம் அளிக்கும் செயலை உடனே செய்து முடிக்க வேண்டும்; அப்போதுதான் அச்சம் இறந்தொழியும்.

—எமர்சன்

### ஆசை

உண்மை, அறிவு, நேர்மை ஆகியவை தெய்வீக குணங்கள் அல்ல; மனிதரின் குணங்களே தெய்வீக வாழ்க்கையை விட மானிட வாழ்க்கையை நடத்தவே மக்கள் ஆசைப்பட வேண்டும்.

—வினோபா.

# மொழியமைப்பில் எளிமைப் புரட்சி

—○—

புலவர். தி. நா. அறிவுஒளி

(சென்ற இதழ் 182–ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீவகன்: ''விந்தம் அடக்கினேன் தந்தநற் றமிழ்மொழி
தற்சுதந் தரம் அறும் அற்பர்வாய்ப் படுமோ?

படைகள்: தமிழ்மொழிக்கு ஜே! ஜே!

சீவகன்: பழையோர் பெருமையும் கிழமையும் கீர்த்தியும்
மன்னிய அன்பின் நும் அன்னையர் பாடி
நித்திரை வரும்வகை ஒத்தறுத்து உமது
தொட்டில் தாலாட்ட, அவ் விட்டமாம் முன்னோர்
தீரமும் செய்கையும் வீரமும் பரிவும்
எண்ணி இருகணும் கண்ணீர் நிறையக்
கண்துயி லாதுநீர் கனிவுடன் கேட்ட
வண்தமிழ் மொழியால் மறித்திக் காலம்
''ஆற்றிலம்; ஆண்மையும் உரிமையும் ஒருங்கே
தோற்றனம்'' எனச் சொலத் துணிபவர் யாவர்?

படைகள்: சீச்சீ!

சீவகன்: போதியமா மலையில் புறப்பட்டு இங்குதன்
படியே உலாவும் இச் சிறுகால் பணிந்துமற்று
''அடியேம்'' எனத்திரி பவர்க்கோ உயிர்ப்பு!

படைகள்: ஏ! ஏ!

சீவகன்: கோட்டமில் உயிர்ப்போ கூறீர்! அன்ன

நாட்டபிமானம் இல் நடைப்பிண மூச்சும்?

படைகள்: சீச்சீ!

இப்பகுதி உரிமை வெறி ஏற்றும் புரட்சிக் கள்ளல்லவா? எத்துணை ஆற்றல் மிக்க எளிய சொற்றிறன் பாட்டில் துள்ளிக் கொதிக்கிறது! 'நாட்டுப்பற்று இல்லாதவன் மூச்சு நடைப்பிண மூச்சு' என்று இதுவரை எவரேனும் பாடுயிருக்கின்றனரோ நந்தமிழிலும், இந்தியத் தாய்மொழிகளிலும்? இதைப் போன்ற உணர்ச்சித் துடிப்போடும், உயிராற்றலோடும் உரிமைவேட்கையைப் புலப்படுத்திய கவிஞனும் உண்டோ? தமிழகம் மட்டுமில்லாமல் இந்திய மாநிலமே எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் நாடக மரபுக்கேற்ற உச்ச நிலைக்கு உரிமை உணர்ச்சி வேட்கையைக் கிளறுகிறார் சுந்தரனார். அந்த அருமாண்பைப் பார்ப்போம்:

சீவகன்: சேனையோடு இவ்வழி திரிந்து நேற்றுஇரவில் நும்
திரு அனையார்களும் சேய்களும் கொண்ட
வெருவரு நித்திரைக்கு உறுகண் விளைத்துநும்
பாஷாபிமானமும் தேசாபி மானமும்
பொருளெனக் கருதாது அருள்நிறை நுமது
தாய்முலைப் பாலுடன் வாய்மடுத்து உண்ட நல்
ஆண்மையும் சுதந்திர கேண்மையும் ஒருங்கே
நிந்தை வஞ்சியர் செயவந்த நும் கோபம்
முற்றும் இயல்பே. மற்றுதன் குகையுள்
உற்றரி முகமயிர் பற்றிடின் அதற்கு அக்
குறும்பால் எழுஞ்சினம் இறும்பூது அன்றே!
உரிமைமேல் ஆண்மை பாராட்டார் சாந்தம்
பெருமையில் பிணத்திற் பிறந்தோர் சீதம்,
அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டு அபிமானம் உள் மூட்டிய சினத்தீ

அன்றோ வானோர்க்கு என்றுமே உவப்பு!
வந்த இக்கயவர் நும்சிந்தையிற் கொளுத்திய
வெந்தழற்கு அவமே இந்தனம் ஆகுக!

எவ்வளவு உரிமைப்பசி நம் மனோன்மணியப் புலவர்க்கு என்பதை இவ்வடிகள் தெள்ளனக் காட்டுமன்றோ?

சீவகன்: ''இன்றுநீர் சிந்தும் இரத்தம் ஓர் துளியும்
நின்று உகம் பலவும் நிகழ்த்துமே! ''இந்தப்
பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர்;
தீண்டன்மின் திருந்தலீர்! அவர் தம் செருக்கு.
சுதந்திரம் அவர்க்குயிர்; சுவாசமற் றன்று.
நினையுமின் நன்றாய்க் கனவினும் இதனை
என முரசறையுமே எத்திசையார்க்கும்.
இத்தனிப் போரில் நீர் ஏற்றிடும் காயம்
சித்தங் களித்து, சயமாது உமக்கு
முத்தம் இட்டு அளித்த முத்திரை ஆசி
எத்தனை தலைமுறைக்கு இலக்காய் நிற்கும்
போர்க்குறிக் காயமே புகழின் காயம்
யார்க்கது வாய்க்கும்! ஆ! ஆ! நோக்குமின்!
அனந்தம் தலைமுறை வருந்தனி மாக்கள்,
தினந்தினம் தாம் அனுபவிக்கும் சுதந்திரம்
தந்ததம் முன்னோர் நொந்தபுண் எண்ணிச்
சிந்தை யன்புருகிச் சிந்துவர் கண்ணீர்
என்றால் அப்புண் இரந்து கோட் டக்கது
அன்றோ? அறைவீர். ஐயோ! அதுவும்
புண்ணோ? புகழின் கண்ணே! எவரே
புண்படாது உலகில் புகழ் உடம்பு அடைந்தார்?
புகழ் உடம்பு அன்றிஇவ் விகழ் உடம்போமெய்?
கணங்கணம் தோன்றிக் கணங்கணம் மறையும்
பிணம்பல, இவர் எலாம் பிறந்தார் என்பவோ

... ... ... ... ...
பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோர்!
... ... ... ...
... ... ... ... ... வீரர்காள்!

நீடுபோர் குறித்து இவண் நின்ருேர் தம்முள்
யாரோ ஆயினும் சீராம் தங்கன்
உயிர் உடம்பு ஆதிகட்கு உறும் அயர்வு உன்னிச்
சஞ்சலம் எய்துவோர் உண்டு எனில், சாற்றுமின்
வஞ்சகம் இல்லை. என் வார்த்தை ஈது உண்மை
மானமோடு அவரை இம் மாநகர் அதனுள்
சேமமாய் இன்று இருத்திடுவம். திண்ணம்!
உத்தம மாதர் உண்டு மற்று ஆங்கே
எத்தனையோ பேர். இவர்க்கு அவர் துணையாம்!''

படைகள்: இல்லை! இல்லையிங்கு அத்தகைப் புல்லியர்!''

இப்பகுதியினைக் கற்போர் எத்தகைய எழுச்சியுறுவர் என்பதை எடுத்துரைக்க வேண்டுமா? இவ்வளவு ஆற்றல் மிக்க உரிமை முழக்கம் அக்கால அரசியலைக் குறித்து உட்கொண்டே புலவர் சுந்தரனர் எழுதினர். இவரன்ருே முதல் உரிமைக்கவிஞர்! விடுதலை வேட்கையை முறையே வெளியிட்ட முதல் உரிமைக் கவிஞர்களாகிய வடலூர் வள்ளலாரும், மனேன்மணியம் சுந்தரனரும் அழியாத இடத்தைப் புரட்சியிலக்கிய உலகில் கைப்பற்றியுள்ளமையை யாரும் மறுத்தற்கியலாது. முதல் உரிமைக்கவிஞர்கள். தமிழின் எளிமைக்கு உழைத்து இலக்கியப் புரட்சி செய்திருக்கும் மாண்பையும் நினைந்து போற்ற வேண்டும்.

கவிதைத் துறையில் சந்த இசைப்பாவாகிய சிந்துக்குச் சிறப்பான இடத்தை உண்டாக்கியளித்தவர் சின்னிகுளம் புலவர் அண்ணமலை ரெட்டியாரேயாவார். புகழ்பெற்று மின்னுபவரும்,

இன்று புகழ்பெற முயல்பவருமாகிய பல கவிஞர்களுக்கு மறைமுக ஆசிரியராக இவர் பாக்கள் விளங்குகின்றன எனில் அது மிகை யன்று. இவருடைய மொழியமைப்பெளிமை மிகவும் எளிய இயல் புடையது. பேச்சுவழக்குத் தொடர்களைக்கூடப் பாட்டில் நயமாக ஆண்ட திறன்மிக்கவர் இவர்.

மருளற்றிட நினைந்து மனதிற் களிசிறந்து பல இலகு சிந்து பாடினரேனும் ஒன்றிரண்டை மேற்கோளாக காட்டல் சாலும்என எண்ணுகிறேன்.

"..... ..........என்றும்
வாழும் கழுகுமலை ஆம் வளஞ் சொல்வேன் மாதே!
கேள் இப்போதே
வெள்ளை நாரை கொத்தும் வேளை தப்பி
மேற்கொண்டு எழுந்து சின வாளை கதி
மீறிப் பாயுந் தோறுங் கிரிச் சாயுந் தென்னம் பாளை யுடன் தாழை
தெள்ளும் பிள்ளை அன்னப் பேடும் மிக
செவலானதுவு மூடும் பின்பு
தேக மலர்த் தவிசிற் சாமத்தினில் நாடும் உறவாடும்
மின்னுக் குலவி மதி மானும் வரி
வெள்ளிப் பணிலராசி தானும் மட
மின்னார் விழிகளென்ன மின்னுகொண்ட முத்துமானும் மடமானும்
வன்னத் தாமரையைக் கண்டு வாயின்
மதுரராகம் பாடிக்கொண்டு மதி
மயங்கி யேட்டினுடன் முயங்கியே கிடக்கு வண்டு கள்ளை யுண்டு
அந்தரத்துப் பெண்கள் நாடி யங்கு
மன்பாகவே விளை யாடி செல்லு
மன்னலார் நடக்கு நன்னடைக் குறுகி யன்னஞ் செல்லும் பின்னும்
மந்தமேதி யுள்ளே யெட்டும் சினை
வராலும் எழுந்துமே முட்டும் போது
மடிசுரந்து கன்று தனை நினைந்து கண்ட மட்டும் பாலைக்கொட்டும்!"

எத்துணை வளமான கற்பனை சந்தபேத இன்ப நயத்தோடு எளிய சொல்லமைப்பருவியோடு பொங்கிப் பெருகுகிறது காண்மின்!

பழைய மரபான ஐந்திணை ஒழுக்கங்களையும் சிந்துப்பாட்டில் எவ்வளவு வாய்ப்பாக இவர் ஆண்டிருக்கிருர் என்றுபார்ப்பது ஒரு தனிச்சுவைவிருந்தாகும். மகளைக் காதலன் வீட்டைவிட்டுத் தன்னூருக்குக் காட்டுவழியாகக் கடத்திக்கொண்டு போய்விட்டான். இதைத் களவொழுக்கத்தில் 'உடன்போக்கு' என்பர். தொல்காப்பியர் போன்ற சான்ருேர்களெல்லாரும் இவ்வாறு பெற்ருேருக்குத் தெரியாமல் தன்காதலியைத் தன்னூருக்கு அழைந்துச் சென்று மணப்பதை ஓர் ஒழுக்கமாகவே பாராட்டியுள்ளனர். மகள் போனபின் பெற்ற தாய்க்கு ஆற்ருமை மிகுகின்றது. தன் பிரிவாற்ருமையைப் பாடுகிருள். உணர்ச்சிக்கு—தாயின் உணர்ச்சிக்கு-சிந்து வடிவம் தருகிருர் கவிஞர்.

“பாதி ராத்திரி வேளையில் வீட்டுப்
பக்கத்தில் வந்து —மேவி, பஞ்ச
பாதகன்ஒரு பாவி; சிறு
பாவையை மெல்லக் —கூவி; கையைப்
பற்றிக் கூட்டிக் கொண்டேகினன் பதை
பதைக்குதே எந்தன் ஆவி!
சோதனைப் பிரகாரமா யென்னைத்
தொடர்ந்ததே பெருந் தோசம்—எவர்
சூதினுல் வந்த மோசம்—இனித்
தொலையுமோ பிள்ளைப் பாசம்—சுற்றத்தார்
கண்டாலே அவர்
சொல்வாரே பரி யாசம்!”

இயல்பான உணர்வெழுச்சிகளை எளிய வழக்குச் சொற்களாயே அடுக்கிச் சொல்கிருர் அன்ருே! இதனினும் எளிமை

வேறென்று உண்டோ?

தாய் மகளின் வளர்ச்சியைப் பற்றி ஐயமுறுகிருள். சிறு பெண்ணென்று எண்ணினேனே அவள் காதலிக்கும் பருவமடைந்துவிட்டாளோ? பத்து திங்கள் சுமந்துபெற்ற வயிறு அவள் பிரிவால் எரிகிறதே! பாலைக்காட்டில் மகளின் மெல்லடிகள் கன்றிச் சிவக்குமே! வெப்பத்தைப் பொறுக்கமாட்டாளே! ஆங்குப் பல்வகைக் காட்டுவிலங்குகள் திரிந்துகூவுமே! அதைக்கேட்டாள் அஞ்சுவாளே! இதற்கென்செய்வோம்? என்றெல்லாம் பல்வாறு எண்ணி அல்லலுறுவதை அழியா இசை ஓவியமாக்கியுள்ளார்.

''மையல் கொண்டொரு ஐயன் பின் செல்ல
வயது மீறின -மாதோ? இந்த
மார்க்கந்தோன்றின தேதோ? சென்ம
வாசனைப்பலன் ஈதோ? ஐயோ!
மாதம்பத்தும் சுமந்து பெற்றவள்
வயிறுந்தான் எரி யாதோ?
செய்ய பஞ்சணையும் பொருது
சிவந்து கொப்புளம் ஆகும் நெருஞ்
சிப்பழம் என்று நோகும்-அவள்
சீறடி இரண்டும் வேகும் படி
தீயுங் கானலில் வேனிலாந்
தீயில் எப்படிப் போகும்?
தேடினுங் கிடையாததாகிய
திரவியக் கனு கூலம் போலே
செனித்த பெண்ணுக்குச் சீலம் வேறே
திரும்பினதென் காலம் கிரி
செய்தானே இந்திர சாலம்!
காடு சேர்க்கையில் கரடி வேங்கைகள்
காட்டுமே ஆர வாரம்; அதைக்
காதிற் கேட்க விசாரம்; வைத்துக்
கலந்குவாள் அந்த நேரம் என்றன்

காதலி தன்னை யாதரித்துயிர்
காப்பது வேலன் பாரம்!''

எப்படிப்பாட்டு? 'தமிழ் தேறும் அண்ணாமலையன்றோ இவர்! தெள்ளுதமிழுக்குதவு சிந்துப்புலவரன்றோ இவர்! முத்தமிழ் சேர் கற்றவர்கள் முற்றிலுமுணர்ந்து கொண்டாடிடவேண்டிய இசை மேதையன்றோ இவர்!' என்றல்லவா பாராட்டுகிறீர்கள்? ஆம். எளிமைக் கவிதைக்கு இணையற்ற பணிசெய்தவர் இவரின்றிப் பிறர் உண்டோ?

இவண் விரிவாகக் குறிப்பிட்டோர் மட்டுமின்றி வேறு சிலரும் மொழியமைப்பில் எளிமை உருவாக உழைத்தனர் என்பதை மறந்துவிடக்கூடாது. தெருகூத்துக்களை இசைப் பாடலோடும் பேச்சு உரைநடையிலும் உருவாக்கிய ஊர் பேர் தெரியாத 'நாடோடிப் புலவர்'களும் எளிய தமிழுக்கு மிகப் பெருமளவில தொண்டுபுரிந்திருக்கின்றனர்! தனிப்பாடல் திரட்டில் காணும்சில தமிழ்க்கவிஞர்கள் மொழியமைம்பில் எளிமைக்கு வழியமைத்திருக்கின்றனர். இவர்களையெல்லாம் இலக்கிய வரலாறு மறவாமல் நன்றியோடு போற்றும் என்பது திண்ணம்.

ஒரு மொழியின் மாற்றத்திற்குத் திடுமென 'ஒரே ஆள்' காரணமாக அமைந்து விட முடியாது என்பதை மட்டும் வற்புறுத்தவே இத்துணை விளக்கம் நல்க வேண்டி இருந்தது! உரை நடையில் எளிமையை ஆறுமுக நாவலரும், இராமலிங்க அடிகளுார், வேதநாயகரும் பிறரும் செய்தமையையும் குறிக்கவேண்டும். இவர்களோடு வீரமாமுனிவர் பணியும் கருதற்குறியதாம். இவர்கள் நடையில் வட சொற்கள் திணிப்பு மிகுந்திருந்தது ஒரு குறையாக இப்போது தோன்றினலும் எளிய அமைப்புக்கு உதவிபவர்கள் என்ற அளவில் போற்றுதற்குரியோரே என்பதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

# தொல்காப்பியத்தில்
# ஒரு நூற்பாவின் விளக்கம்

—○—

பண்டித. சித. நாராயணசாமி,

அறுபத்துமூவர்மடம், திருவையாறு.

(சென்ற இதழ் 147-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழக்காறு அல்ல = வழக்கு நெறிபற்றி வந்தனவாகா செய்யுளாறு = செய்யுள் நெறி பற்றி வந்தன.

இனித் தாமரை யென்னும் சொல் தாமரை எனவே நில்லாது, செந்தாமரை எனச் செம் என்னும் பண்புச் சொல்லாலடுக்கப்படுவது எதுகுறித்தெனின், வேறு தாமரைப் பொருளிருக்கிறது அதனை யுணர்த்தாமல் செந்தாமரைப் பொருளை யுணர்த்துவதற்காகும் என்பதற்காமென்க.

எனவே செந்தாமரை என்னும் பண்புகொள் பெயர் வேறு தாமரையுண்டெனக் காட்டி அதனையுணர்த்தாமல் நீக்கப்பெற்றுச் செந்தாமரைப் பொருளையுணர்த்துவதற்குரியதாகச் சிறப்பிக்கப்படுகிறது. என அறியப்படும்.

இனி ஞாயிறு என்பது ஞாயிறெனவே நில்லாது செஞ்ஞாயிறெனச் செம்மென்னும் பண்புச் சொல்லால் அடுக்கப்படுவதும் வேறு ஞாயிற்றுப் பொருளிருக்கிறது.

அதனையுணர்த்தாமல் செஞ்ஞாயிற்றுப் பொருளையுணர்த்து வதற்காகும் என்பதற்கில்லையாகும்.

ஆதலால் செஞ்ஞாயிறு என்பது வேறுஞாயிறுண் டெனக்காட்டி அதனையுணர்த்தாமனீக்கப்பட்டுச் செஞ்ஞா யிற்றுப் பொருளை யுணர்த்துவதற்காகச் சிறப்பிக்கப்பட் டது என்பதில்லை என அறியப்படும்.

இவ்வாறு வருவனவற்றை இனச்சுட்டின்றி வரும் பண்புகொள் பெயர் என்ப. இவ்வாறு வருவனவற்றையே ஆசிரியரும் "இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்" என் றனர் என முடிந்தது முடித்தலாகக் கூறி முடிக்கின்றனர்.

இந்நூற்பாவால் செந்தாமரை முதலியனபோன்றன வும் செஞ்ஞாயிறு முதலியன போன்றனவும் ஆகிய பெயர் களைக் கருதுமாறு ஆசிரியர் கூறினரன்றிவிசேடணங்களைக் கருதிக்கொள்ளுமாறு கூறினரல்லர்.

விசேடணங்களைக் கருதிக்கொள்ளுமாறு கூறின் எல்லா விசேடவியல்புமடங்கப் பொதுவாகக் கூறியிருப்பர் என்க.

விசேட இயல்பை இந்நூற்பாவிற் கூறுங் கருத்தின ரில்லையென்பதைக் குறிக்கவே சேனவரையர் முடிந்தது முடித்தலாக, "பண்புகொள் பெயர் இனஞ்சுட்டி வருதல் மரபு" என எழுதினரென்க.

இனிமேலே "பன்மை சுட்டிய எல்லா பெயரும்" (தொல்-சொல்-பெயர்-உ௰அ) என்னு நூற்பாவினுரையில்

''இயைபின்மை நீக்கலும் பிறிதினியைபு நீக்கலும்எனவிசேடித்தல் இருவகைத்து'' எனவும் ''விசேடிக்குங்கால் பிறிதினியைபு நீக்கல் ஒருதலையன்று என்க'' எனவும் சேனுவரையர் எழுதியிருக்கின்றனர். அங்கவ்வாறு எழுதியது விசேடணத்தை மட்டுங்கருதி எழுதியதாகும்.

அன்றி ''செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்'' என்பது முதலிய இடங்களில் செம் என்பது முதலியன இயைபின்மைநீக்க வந்தனவல்ல வென்பதும் வெளிப்படும்.

ஞாயிற்றின்கண் செம்மைநிறமில்லை யென்பாரை நோக்கியோ அதன்கண் செம்மைநிறமுண்டெனக் குறிப்பிடவோவரின் இயைபின்மை நீக்கிய விசேடணமாக வந்ததாகும். அவ்வாறு வந்ததன்ருகலால் விசேடிக்கற்பாலதுவிசேடியாது நின்றதாகவே முடியும். இவ்வாறு வரும் பிறவும் இத்தகையனவே யாதுமென்க.

பண்புகொள்பெயர்கள் பிறிதினியைபு நீக்கும் விசேடணமாகிய பண்பையுடையனவாகவே வரப் பண்டைச் சான்ருேர்கள் வழங்கினர். பின்னர் சில சான்ருேர்கள் செய்யுட்கண் அணிபயக்கும் விசேடணமாகிய பண்புடையனவாகவும் வழங்கினர். அவர் அவ்வாறு வழங்குவது பண்டையோர் கொள்கையுடன் மாறுபட்டதாயினும் சான்ருேர் கொள்கையாக இருத்தலால் அவையும் செய்யுட்கண்ணுயினமையும் என வழுவமைத்தனர். பிறிதில்லையென்க.

சில பண்புகொள் பெயர்கள், பண்புகொள் பெயராக இருந்தும் பண்மையுணர்த்தாமல் சாதியை யுணர்த்துவனவாகிப் பிறசாதிப் பொருளுண்டெனக்காட்டிச் சிறப்

பிக்கப்படுவனவாகவரும். அவ்வாறு வருதல் வழுவாயினும் வழக்குப்பற்றி அவ்வாறு வருதலால் அமைவனவாயின. (ஒருவாற்றானப் பொருளுக்குரியனவாதலின் அமைவனவாயின என்க) அவ்வாறு அமையும் பண்புகொள்பெயர்களை மேலே கூறிய "தகுதியும் வழக்குந்தழீஇயின" என்னு நூற்பாவாலமைத்தனர் எனச் சேனாவரையர் முதலிய எல்லா உரையாசிரியருங் கருதுகின்றனர்.

இன்னும் சில பண்புகொள் பெயர்கள் பண்பையுணர்த்தினும் இனப்பொருளுண்டெனக்காட்டிச் சிறப்பிக்கப்படாமல் வருவனவாகக் காணப்படுகின்றன. அவை அவ்வாறு வருதலும் வழுவாயினும் செய்யுட்கண் அணிகுறித்து நிற்றலால் அமைவனவாயின. அவ்வாறு அமையும் பண்புகொள் பெயர்களை இந்நூற்பாவிற் கூறியமைத்தாரென்க.

'குறுஞ்சூலி குறுந்தடி' என்பனபோல்வன பண்புகொள்=பெயர்கள்போலத் தோன்றினும் அவையிடுகுறிப்பெயராய் ஒவ்வொரு வகைச் செடிப்பொருள்களை யுணர்த்துவதால், அவைபோன்றனவற்றை, பண்புகொள் பெயர்களல்லனவாதலின், ஒன்றுமுரையாதுவிடுத்தனர். அவை பண்புகொள் பெயராயின், பண்புகொள்ளாத நிலையில் தாமரை ஞாயிறு யாடு என நிற்பதுபோலச் சூலிதடி என நிற்றல்வேண்டும். அவ்வாறவை நில்லா என்க. அவ்வாறு நில்லாமல் குறுஞ்சூலி குறுந்தடி எனப் பிரியாது ஒரே சொல்லாக ஒவ்வொன்றும் நிற்றலால் இடுகுறிப்பெயரென்னற்கேற்றன என்க.

பண்பு பண்பியெனக் கருதற்கிடமில்லாமல் நிற்பதைக்குறித்தே ஒரே சொல்லாக என எழுதினனென்க.

(முற்றும்)

# துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்

(ஆ. சிவலிங்கனுர், மயிலம்.)

## திருவள்ளுவர்பால் மதிப்பு

திருவள்ளுவரிடத்துப் பெரிதும் மதிப்புடையவர்நமது அடிகள் என்பதை அவரது வாக்காலேயே உணரலாம். திருவள்ளுவரைக் குறிக்குமிடங்களில் மதிப்பும் அன்பும் தோன்றக் குறிப்பர்.

'அறம் சூழ்ந்தோர்' (பிரபு. மாயை. உற். 14)
'கற்றுணர் பழையோர்' (பிரி. சித். 42)
'வாய்மையிற் சிறப்பவர்' (பிர. சித். 27)
'வள்ளுவனுர்' (திருவெ. உலா. 72)
'என்னடிகள்' (திருவெ. கல. 42)
'ஆற்றற் பெரியோர்' சிவ. பிள். தால். 1)
'இணையில் திருவள்ளுவப் பெயர்கொள் எம்மான்'
(சிவ. பிள். முத். 5)
'தெய்வப் புலமை திருவள்ளுவனுர்'
(நா. நா. ம. மா. 28)

என்பனவற்றைக்காண்க. திருக்குறளை நமதடிகள் ஆண்டுள்ளதுபோல் வேறெவரும் ஆண்டிருக்கமாட்டார்கள் என்றே கூறலாம். கருத்துக்களையாண்ட இடங்கள் பல. குறள்களை

யும் மறுப்பதுபோல் ஆளும் இடங்களும் உள, குறள்க ளுக்கு விளக்கவுரைகளும் ஆங்காங்கு உரைத்துள்ளார் அடிகள்.

பகிர் மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெருரின் அழுங்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பை நீயே
பேயேன் பெருது பெற்றூர் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
அன்னம் ஆடும் அகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப ஆத லாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனர்
நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலரெனும்
செஞ்சொற் பொருளின் தேற்றறிந் தேனே.

(நால். நா. மாலை. 28)

இப்பாடலில் நன்றறிவார்கள் அந்நன்மைக்காகப் பல இன் னல்கள் அடைந்து மனத்தகத்துக் கவலையும் கூர்வதுபோல மாணிக்கவாசகர் இறைவனருள்பெறவேண்டும் என்ற நன் னினைவால் அது கிடைக்கப்பெற்றும் மீண்டும் மீண்டும் பெருதவர்போல அழுவதாகவும் கயவர்கள் தமக்கு நல்ல நினைப்பின்மையால் அதுகுறித்து நெஞ்சத்துக்கண் கவலை யில்லையாக-அடையும் இன்னல்களும் இல்லையாகத் திருவு டையார்போல் காணப்படுவதுபோல, அடிகள்தாம் தமக்கு இறையருள் வேண்டும் என்னும் நன்னினைவின்மையால் உள்ளத்துக் கவலையின்றி, இறையருளைப் பெற்றூர்போலக் களிகூர்வதாகவும் கூறி வள்ளுவரது குறளுக்கு விளக்கத்

தைத் தந்திருக்கும் அழகு வியத்தற்குரியதாகும்.

கற்று ரறிகுவர் மக்கள்தம் பேறெனக் கட்டுரைத்த
சொற்றான் ஒருபெண் ஒழித்ததென் பாரொடு
தொல்லுலகில்
நற்றாண் மகப்பெறு கென்றாதி சொல்பவர் நாணவுனைப்
பெற்றான் மலையரையன் குன்றை வாழும்
பெரியம்மையே

(பெரிய. கலி. 12)

இப்பாடலில் "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பே றல்ல பிற" என்ற குறளில் 'அறிவறிந்த மக்கள்' என்பதற்கு உரைவிளக்கப்பட்டுளது. இக்குறளுரையில் பரிமேலழகர் "அறிவறிந்த என்றதனால் மக்கள் என்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது" என்று உரை விளக்கம் கூறினர் (குற. 61.) இவ்வுரையினை நமது அடிகள் மறுத்தனர். "மக்கள் தம் பேறெனக் கட்டுரைத்த சொல்தான் ஒரு பெண்ணொழித்தது என்பார்" என்றது பரிமேலழகர் போன்றாருரையாம். உலகினரும் முதற்கண்பிறக்கும் குழந்தை ஆணாகவேயிருக்கவேண்டும் என்று கருதுகின்றனர். பிறந்தது ஆணா, பெண்ணா என்ற கேள்விக்கு ஆண் என்றதும் மகிழ்ச்சியும், பெண் என்றதும் சற்றுச் சலிப்பும் கொள்கின்றனர். வாழ்த்துக்கூறுவோரும், "நல்ல ஆண்பிள்ளையைப் பெறுக" என்று வாழ்த்துகின்றனர். இதைமனதில்வைத்துத்தான் நமது அடிகளார் முதுகுன்ற இறைவியிடம் மேற்பாட்டைக் கூறினர். "நீ பெண்ணாக இருந்தும் அறங்கள் பல செய்தனை; அருள் பல புரிந்தனை. உலகம் நின்னால் தோற்றுவிக்கப்பட்டது. உலகம் நின்னால்

பிழைக்கின்றதென்ருல் நின்னைப் பெற்றெடுத்த மலையரையனே தவமுடையவனன்ருே? அவன், உலகினர் நாணப் பரிமேலழகர் போன்ருேர் நாண உலகிற்கின்னருள்சுரக்கும் அறிவுள்ள நின்னைப் பெற்ருன்'' என்று கூறுமுகத்தான் பெண்ணினத்தை ஆணினத்தைப்போலவே எண்ணவேண்டும் என்ற சிறந்த கருத்தைக் கூறியுள்ளார் அன்ருே?

வாய்மை யெனினும் புலரியைக் கூறுதல்
வாரணங்காள்
சேய்மை யறுநங் கொழுநர்தங் கூட்டம்
சிதைத்தெமக்குத்
தீமை பயந்தமை யால்வேங்கை நாயகர் செய்தவந்த
தூய்மை யுணர்ந்தவர் வாய்மையன் ருமெனச்
சொல்லுவரே''

(திரு. வே. கோவை. 211)

இதனகத்து ''வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமையிலாத சொலல் (குறள் 216) என்ற குறளை விளக்கியிருத்தல் காணலாம். இது கோழி குரல் காட்டல் துறைப்பாற்படும். தலைவனேடு கூடியிருக்கும் தலைவிக்குக் கோழியின் குரல் விடியலைத் தெரிவித்தலின் துன்பத்தைத் தருகின்றது. அதனுல் கோழி விடிதலைக் கூறுதல் வாய்மை என்ருலும் அக்கூற்று தீமையைத் தருதலால் அறநூல்படி அதாவது மேற்குறளின் படி வாய்மை யாகாது என்று அக்குறளின் கருத்து விளக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

# மதுரைத் தமிழ்ச் சங்கம்

## பாண்டியன் நூலகம்

### புத்தகப் பட்டியல்.

**இலக்கண நூல்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | தொல்காப்பியப்பொதுப் பாயிரம் மூலம்-உரை: | ஆத்திரையர் |
| 2. | தொல்காப்பியம் பொருளதிகார ஆராய்ச்சி | வே. முத்துசாமிஐயர் எம். ஏ. எல். டி. |
| 3. | தொல்காப்பியம் சொல்லதிகாரம் | நச்சினார்க்கினியர் |
| 4. | தொல்காப்பியம் பொருளதிகாரம் Vol 1 | ச. பாவனந்தம்பிள்ளை (பதிப்பாசிரியர்) |
| 5. | Vol 2 | ,, |
| 6. | தொல்காப்பியம் சொல்லதிகாரம் | ஆறுமுகநாவலரவர்கள் |
| 7. | தொல்காப்பியம் பொருளதிகாரம் உரையுடன் | பவானந்தம் பிள்ளை பதிப்பாசிரியர் |
| 8. | ,, பொருளதிகாரம் Vol 1 | எஸ். பவானந்தம் பிள்ளை |
| 9. | ,, Vol 2 | (பதிப்பாசிரியர்) |
| 10. | தொல்காப்பியம் (செய்யுளியல்) | நச்சினார்கினியார் உரை |
| 11. | தொல்காப்பியம் சொல்லதிகாரம் (இளம்பூரணம்) | கா. நமச்சிவாயம் |

| | | |
|---|---|---|
| 12. | தொல்காப்பியம் | தொல்காப்பிய முனிவர் |
| 13. | ,, எழுத்ததிகாரம் | நச்சினார்க்கினியர் உரை |
| 14. | ,, பொருளதிகாரம் உரையுடன் | ( ச. பவானனந்தம்பிள்ளை பதிப்பாசிரியர் |
| 15. | யாப்பருங்கலக்காரிகை | அமிர்தசாகரர் |
| 16. | யாப்பருங்கலம் | அமிர்தசாகரனார் |
| 17. | ,, | அமிர்தசாகரர் |
| 18. | யாப்பிலக்கணம் | விசாகப்பெருமாள் |
| 19. | யாப்பருங்கலக்காரிகை மூலமும்-உரையும் | அமிர்தசாகரர் |
| 20. | நன்னூற் காண்டிகையுரை | சே. கிருஷ்ணமாச்சாரி |
| 21. | நன்னூற் காண்டிகையுரை | பவணந்தியார் |
| 22. | நன்னூல் சுருக்கம் | எஸ் சீனிவாசஐயங்கார் |
| 23. | நன்னூல் | பவணந்தி முனிவர் |
| 24. | நன்னூற் காண்டிகையுரை | —— |
| 25. | நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயருரையும் | பவணந்தி முனிவர் |
| 26. | நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும் | ,, |
| 27. | நன்னூல் உரையுடன் | ,, |
| 28. | நன்னூல் மூலமும் விருத்தியுரையும் | ,, |
| 28. | நன்னூல் மூலமும் விருத்தியுரையும் | சங்கரநமச்சிவாயப் புலவர் |
| 29. | நன்னூல் காண்டிகை உரை | வை மு. சடகோபராமனுஜம் |
| 30. | ,, | ஆறுமுகநாவலர் |

| | | |
|---|---|---|
| 31. | நன்னூல் | பவணந்திமுனிவர் |
| 32. | நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயர் உரையும் | ,, |
| 33. | நன்னூற் சுருக்கம், மூலமும் காண்டிகையுரையும் | கொ. இராமலிங்கத் தம்பிரான் |
| 34. | தண்டியலங்காரம் | அ. குமாரசுவாமி பிள்ளை |
| 35. | தண்டியலங்காரம் மூலமும் உரையும் | அ. குமாரசுவாமி |
| 36. | தண்டியலங்காரம் | தண்டியாசிரியர் |
| 37. | அணியிலக்கணம் | விசாகப்பெருமாள் |
| 38. | தண்டியலங்காரம் வினு-விடை | வ. தங்கையா நாடார் |
| 39. | தண்டியலங்காரம் மூலமும் உரையும் | அ. குமாரசாமி பிள்ளை |
| 40. | ,, ,, | பாண்டித்துரை |
| 41. | நேமிநாத மூலம் | குணவீரபண்டிதர் |
| 42. | நேமிநாதம் உரையுடன் | ,, |
| 43. | நேமிநாதம் மூலமும் உரையும் | ,, |
| 44. | பாப்பாவினம் | கி. இராமாநுஜம் ஐயங்கார் |
| 45. | பன்னிரு பாட்டியல் | சங்கத்துச்சான்றோர் |
| 46. | சிதம்பரப் பாட்டியல் உரையுடன் | மு. இராகவையங்கார் |
| 47. | பாப்பாவினம் | கி. இராமாநுஜம் ஐயங்கார் பரிசோதிக்கப்பெற்றது |
| 48. | நவநீதப் பாட்டியல் உரையுடன் | வையாபுரிப்பிள்ளை பி. ஏ., பி. எல். |
| 49. | விருத்தப்பாவியல் | வீரபத்திரமுதலியார் பி. ஏ., பி. எல். |

| | | |
|---|---|---|
| 50. | பேரகத்தியத் திரட்டு மூலமும் உரையும் | எஸ். பவானந்தம்பிள்ளை |
| 51. | அகப்பொருள் விளக்கம் மூலம்-உரை | நாற்கவிராசநம்பி |
| 52. | அகப்பொருள் விளக்கம் | நாற்கவிராசநம்பி |
| 53. | ,, | ,, |
| 54. | அகத்திணையியல் | விசாகப்பெருமாள் |
| 55. | மாறனலங்காரம் உரையுடன் | திருக்குருகைப்பெருமாள் |
| 56. | மாணவர் தமிழ் இலக்கணம் | க. பழனிக்குமார பிள்ளை |
| 57. | வினைப் பகுபத விளக்கம் | அ. குமாரசுவாமிப் பிள்ளை |
| 58. | இலக்கண சந்திரிகை | ,, |
| 59. | இருபாவிருபது | அருணந்திதேவநாயனார் |
| 60. | லாங்மன்ஸ் தமிழ் இலக்கணம் | எம். வி. இராமானுஜம் ஐயங்கார் |
| 61. | இலக்கணப்பாடங்களும் உரைநடையாக்கமும் 2 பாகங்கள் | எம். சண்முகசுந்தரம் எம். ஏ., எல். டி. |
| 62. | சிற்றிலக்கண விளக்கம் | கா. நமச்சிவாய முதலியார் |
| 63. | இலக்கணக் கொத்து | சுவாமிநாததேசிகர் |
| 64. | செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் | பொன்னம்பலம் இராமநாதன் |
| 65. | புறப்பொருள் வெண்பாமாலை | ஐயனாரிதனார் |
| 6[illegible]. | பகுபத விளக்கம் | குமாரசுவாமிப் புலவர் |
| 67. | பிரயோக விவேகம் மூலமும் உரையும் | சுப்பிரமணிய தீக்ஷிதர் |